முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சந்திரபகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

29.01.2019, செவ்வாய்க்கிழமை

1. **யோகராசனே அரங்கா வாழ்க**
**உயிர் காக்கும் ஜலதானம் செய்து**
**வகைபட தருமமும் வளர்க்கின்ற**
**வள்ளலே வாழும் ஞானியே**
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
**இனிமைபட விளம்பி கலை திங்கள்**
**இயம்பிட மூவை திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 15ம் நாள் 29.01.2019, செவ்வாய்க்கிழமை)**
3. வாரமதில் சந்திரபகவான் யானும்
வழங்குவேன் உலகம் நீர்நில வளமுற
அறமெனும் ஆறுமுக அரங்கன்
ஆற்றலாய் செய்து வரும் தருமம்
4. தருமம் எங்கும் பெருகி வர
தருமசிந்தை மக்களிடை வளர
வருமுலகில் இயற்கை பேரிடர்
வாராத பாதுகாப்பு கூடும்
5. கூடவே உயிர்க்கொலை நீக்கி
குவலயமே சுத்தநெறி ஏற்று
நாடவே அரங்கன் ஞானவழியை
ஞாலமதில் மும்மாரி பொழிந்து
6. பொழிந்து நீர்நில வளம் பெருகும்
பூமியே பசுமை வளம் பெருகி
அழிவில்லா வளர்ச்சி காணும்
ஆறுமுகன் அருள்பலம் அடையும்
7. அடையவே சோமவாரம் தனில்
அரங்கனை கண்டு ஆசி தீட்சை
அடைகின்ற உலக மக்களுக்கு
ஆன்ம பலம் மனோபலம் தெளிவு திடம்
8. திடமான எல்லா பாதுகாப்பும்
தெரியவரும் சகல வளமும்
இடர் என்பது இல்லா மாற்றம்
எக்காலமும் தொடர நேரும்
9. நேருமைபட அரங்கன் காட்டும்
ஞானநெறி வழிமுறையை
தருமமோடு ஏற்றுத் தொடரும்
தரணி மக்கள் அவரவர் தானும்

10. தானுமே தவபலம் அடைவர்
தவராசன் ஆசி பெறுகின்ற
ஞானவான்கள் கழனி மக்களுக்கும்
ஞாலமதில் சந்திர பகவானும் அருளிடுவேன்

11. அருளிட மனமகிழ்ச்சி திடமுடன்
ஆறுமுகனார் ஆசி அருள் பெற
அருளுவேன் அரங்கன் வழி வருபவர்க்கும்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சந்திரபகவான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அளவற்ற யோகங்கள் செய்து வெற்றி கண்டிட்ட யோகராஜனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. உலக உயிர்களை காக்கின்ற தண்ணீரை தானம் செய்தும் உலக உயிர்கள் பசிப்பிணி போக்கி தருமங்கள் செய்து தருமம் வளர்க்கின்ற வள்ளலே, வள்ளல் ஞானியே, வாழும் மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 15ம் நாள் 29.01.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சந்திரபகவான் யானும் இவ்வுலகின் நீர்நிலங்கள் வளம் பெற உரைக்கின்றேன் என்கிறார் மகான் சந்திரபகவான்.

உலகின் நீர்நிலங்கள் வளம் பெறும் வகையில் அறமாகிய தர்மத்தினை, தர்மத்தின் தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனும் செய்து வருகின்றார். ஆறுமுக அரங்கன் ஆற்றலுடன் செய்து வரும் தருமம் உலகமெங்கும் பெருகி வரவர, தருமசிந்தனை மக்களிடையே வளர வளர, வரும் காலங்களில் இயற்கை பேரிடர்கள் ஏதும் வராமல் உலகினில் ஞானிகளின் அருள் பாதுகாப்பு அதிகரித்து காக்கும்.

உயிர்க்கொலையை நீக்கி புலால் மறுத்து சுத்த சைவ உணவினை உண்டு, அரங்கன் கூறும் சுத்த நெறியை ஏற்று கொள்வதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் ஞானவழிக் கொள்கைகளை ஏற்று கடைப்பிடித்து வர, உலகினில் இயற்கையும் மகிழ்ந்து மும்மாரி மழை பொழிந்து நீர்நிலைகளின் வளம் பெருகும். இந்த உலகம் முழுதும் பசுமை வளம் பெருகி அழிவற்ற வளர்ச்சி நிலையை இவ்வுலகம் காணும், முருகப்பெருமானின் அருள்பலத்தினை உலகம் முழுமையாக பெற்றிடும். ஞானிகளின் அருள்பலமும், இயற்கையின் மகிழ்வும் கண்டு உலகம் வளம் பெறவும், உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனின் அருள்பலத்தை அடையவும், அவரவரும் சோமவாரம் (திங்கட்கிழமை) தன்னிலே ஆறுமுக அரங்கனைக் கண்டு பயபக்தியுடன் திருவடி பணிந்து அரங்கரிடத்து ஆசிகளையும் தீட்சை உபதேசங்களையும் பெற்று வாழ்வினில் கடைப்பிடித்திட வேண்டும்.

அரங்கனின் அருளாசிகளையும் அருள்பலத்தையும் அடைகின்ற உலக மக்களுக்கு ஆன்பலம் பெருகிடும், மனோபலம் பெருகிடும், அறிவு தெளிவும், திடசிந்தையும் உண்டாகும். உறுதிமிக்க அரங்கனின் அருள்பாதுகாப்பும் அவர்கள் பெற்று உணர்வார்கள், அவர்களுக்கு சகலவிதமான வளங்களும் துன்பம் இல்லாத நல்மாற்றமும் உண்டாகி, அவர்தம்மை எக்காலத்தும் தொடர்ந்து இவற்றை அடையும் வாய்ப்பையும் பெறுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் நேர்மைமிக்க ஞானநெறி வழிமுறைகளை ஏற்று கடைப்பிடிப்பதோடு தர்மங்களையும் தவறாது செய்து வரவர, அவரெல்லாம் தவங்களை செய்யாமலேயே தவபலனையும் தருமபலனையும் அடைந்து சிறப்பார்கள்.

ஆறுமுக அரங்கனின் ஆசி பெற்றிட்ட அன்பர்களுக்கும், விவசாயிகளுக்கும் இவ்வுலகினில் சந்திரபகவானும் அருள் செய்து காப்பேன். அரங்கனை பின்தொடரும் மக்களுக்கு மனமகிழ்ச்சியும் மனோதிடமும் தந்து அவர்களை காப்பேன் என உரைக்கின்றார் மகான் சந்திரபகவவான்.

–சுபம்–